ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு


**வெளியிடுபவர்** புள்ளிவிபரத் திணைக்களம்
**திகதி** 2019 யூன் 14

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2019 மே

2019 மேயில் தயாரிப்பு நடவடிக்கைகள் 50.7 சதவீதம் கொண்ட சுட்டெண் பெறுமதிக்கு மீட்சியடைந்தன. இது 2019 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 9.7 சுட்டெண் புள்ளிகளைக் கொண்டதொரு அதிகரிப்பாகும். தயாரிப்பு, கொள்வனவு முகாமைத்துவச் சுட்டெண்ணின் மீட்சிக்கு தயாரிப்பு மற்றும் புதிய கட்டளைகளில், குறிப்பாக, புடவைகளின் தயாரிப்பு, அணியும் ஆடைகள், தோல் மற்றும் அதனுடன் தொடர்பான உற்பத்திகள் என்பனவற்றின் உற்பத்திகளிலும் புதிய கட்டளைகளிலும் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும். உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு, தொழிற்சாலைத் தொழிற்பாடுகளில் மேலதிக நேரங்களைப் பயன்படுத்தி குவிந்திருந்த கட்டளைகள் பூர்த்தி செய்யப்பட்டமையே காரணமாகும். குறிப்பாக, புடவை மற்றும் ஆடைகள் துறையிலுள்ள அநேக பதிலிறுப்பாளர்கள் இம்மாத காலப்பகுதியில் நிலுவையிலிருந்த கட்டளைகளை தீர்ப்பனவு செய்வதற்காக தாம் வார நாட்களிலும் அதேபோன்று வார இறுதியிலும் மேலதிக மணித்தியாலங்கள் வேலை செய்ய வேண்டியிருந்தது என்பதனை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

**கொ.மு.சு**
சுட்டெண் பெறுமதி
**50.7**
2019 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 9.7 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பு

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | ஏப். | மே | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **41.0** | **50.7** | **+** | **வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய கட்டளைகள் | 37.5 | 52.0 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |
| உற்பத்தி | 32.5 | 55.0 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |
| தொழில்நிலை | 43.5 | 45.0 | + | வீழ்ச்சி, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 41.0 | 44.5 | + | வீழ்ச்சி, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலாளர்களின் விநியோகிக்கும் நேரம் | 55.5 | 52.5 | - | விரிவு, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

புதிய ஆட்சேர்ப்பில் ஏற்பட்ட சிறிதளவு வீழ்ச்சியின் காரணமாக குறிப்பாக, உணவு மற்றும் குடிபானத் தயாரிப்புத் துறையில் சுருக்கமொன்று அவதானிக்கப்பட்டது. புதிய கட்டளைகள் விரிவடைந்த போதும் கொள்வனவுகளின் இருப்புக்கள் மெதுவான வீதத்திலேனும் தொடர்ந்தும் சுருக்கமடைந்தமைக்கு முன்னைய மாதத்திலிருந்து முன்கொண்டு வரப்பட்ட மூலப்பொருட்களின் இருப்பே காரணமாக அமைந்தது. நிரம்பலர் விநியோக நேரம் மெதுவான வீதத்தில் விரிவடைந்தமைக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் பின்பற்றப்பட்ட பாதுகாப்பு வழிமுறைகளே காரணமாகும்.

தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்புக்கள் நீங்கலாக, கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் தயாரிப்பின் அனைத்து துணைச் சுட்டெண்களும் நடுநிலையான 50.0 மட்டத்திற்கு மேலான பெறுமதியினைப் பதிவுசெய்து 2019 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 2019 மேயில் தயாரிப்பு நடவடிக்கைகள் ஒட்டுமொத்த விரிவொன்றினைக் கொண்டிருந்தமையினை சமிக்ஞைப்படுத்தின.

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலக தயாரிப்பு கொ.மு.சு 2019 ஏப்பிறலிலிருந்தான 0.6 சுட்டெண் கொண்ட வீழ்ச்சியுடன் 2019 மேயில் 49.8 சதவீதம் கொண்ட பெறுமதியினைப் பதிவு செய்தது.

ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், யூரோ வலயம், ருஷியா மற்றும் சிங்கப்பூர் என்பவற்றின் தயாரிப்பு கொ.மு.சு 2019 மேயில் மெதுவடைந்தது. எனினும், இந்தியாவின் தயாரிப்பு கொ.மு.சு மேம்பட்ட வேளையில் சீனாவின் கொ.மு.சு மாற்றமின்றிக் காணப்பட்டது.

*மூலம்: மார்க்கிட்[1], யூன் 14, 2019 இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2019 மேயில் பணிகள் துறை தொடர்ந்தும் தேய்வடைந்தமைக்கு** உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் முக்கிய காரணமாக தொழில்நிலை மற்றும் வியாபார நடவடிக்கை துணைச் சுட்டெண்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும்.

தொழில்நிலை துணைச் சுட்டெண் 2015 மேயில் அளவீடு ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் முதற்தடவையாக மிகக் குறைந்தளவு மட்டத்தினை பதிவுசெய்ததுடன் இதற்கு வியாபார நடவடிக்கைகளில் குறிப்பாக தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிபானம் மற்றும் ஏனைய ஆளணிப் பணிகள் துணைத் துறைகளிலுள்ள ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களின் பணிகள் இடைநிறுத்தப்பட்டமையே முக்கிய காரணமாகும். மேலும், வியாபார நடவடிக்கைகளின் தேய்வு மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்துத் துணைத் துறைகளிலும் அவதானிக்கப்பட்டது. அநேக பதிலிறுப்பாளர்கள் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலிலிருந்து தோன்றிய நிச்சயமற்றதன்மை நாட்டில் இப்பொழுதும் நிலவுவதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, நடவடிக்கைகளுக்கான புதிய வியாபாரம் மற்றும் எதிர்பார்ப்புக்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் மெதுவான வேகத்திலேனும் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.

| மாறி | ஏப். | மே | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **45.3** | **44.7** | **-** | **வீழ்ச்சி, உயர்வு வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 44.0 | 49.4 | + | வீழ்ச்சி, மெதுவான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கைகள் | 45.1 | 41.7 | - | வீழ்ச்சி, உயர்வு வீதத்தில் |
| தொழில்நிலை | 47.3 | 36.4 | - | வீழ்ச்சி, உயர்வு வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணிகள் | 45.3 | 46.4 | + | வீழ்ச்சி, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு | 44.6 | 49.4 | + | வீழ்ச்சி, மெதுவான வீதத்தில் |
| | | **ஏனைய சுட்டெண்கள்** | | |
| விதிக்கப்பட்ட விலைகள் | 53.3 | 50.6 | - | உயர்வு, மெதுவான வீதத்தில் |
| தொழிலாளர் செலவிற்கான எதிர்பார்ப்புக்கள் | 62.6 | 64.8 | + | உயர்வு, மெதுவான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

பணிகள் துறையின் விலை விதிப்புக்கள் 2019 மேயில் மெதுவான வேகத்தில் அதிகரித்தமைக்கு தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிபானம் அத்துடன் ஏனைய தனியாள் பணிகள் துணைத் துறைகளில் சுற்றுலா விடுதிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் வழங்கப்பட்ட விலைக்கழிவுகளே காரணமாகும். மேலும் அடுத்த மூன்று மாதங்களுக்காக எதிர்பார்க்கப்பட்ட தொழிலாளர் செலவு 2019 மேயில் உயர்ந்த வீதத்தில் அதிகரித்தது.

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**44.7**

**2019 ஏப்பிறல் உடன் ஒப்பிடுகையில் 0.6 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சி**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

2019 ஏப்பிறலின் 52.7 இலிருந்து 2019 மேயில் 33 மாதங்களிலே குறைந்த 51.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து உலகப் பணிகள் துறையின் வெளியீட்டின் வளர்ச்சி மெதுவடைந்தமையை எடுத்துக்காட்டியது. எனினும், இது, தொடர்ந்து 118ஆவது மாதமாக உலகளாவிய பணிகள் வெளியீடு வளர்ச்சியடைந்தமையை இது சமிக்ஞைப்படுத்தியது.

யப்பான், சீனா, இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பனவற்றின் பணிகள் கொ.மு.சு 2019 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 2019 மேயில் அவற்றின் பணிகள் துறை மேம்பட்டமையை எடுத்துக்காட்டியது.

*மூலம்: மார்க்கிட்[1], யூன் 13, 2019 இல் உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.